**ஒருங்கிணைந்த கல்வி**
**வேலூர் மாவட்டம்**

**அனைத்து அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் மேநிலை / உயர்நிலை / நடுநிலை பள்ளித் தலைமையாசிரியர்களின் கவனத்திற்கு**

ஒருங்கிணைந்த கல்வி, சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் ஆணையின்படி அனைத்து 7–ம் வகுப்பு மாணவர்களுக்கு 09.04.2019 அன்று மதியம் 2 முதல் 4.30 மணிவரை மாநில அளவிலான அடைவுத் தேர்வு (SLAS) நடத்துதல் வேண்டும்.

1. அனைத்து 7–ம் வகுப்பு மாணவர்களையும் 09.04.2019 அன்று பிற்பகல் தவறாமல் பள்ளிக்கு வருகை புரிதல் வேண்டும்.
2. 7–ம் வகுப்பு மாணவர்களின் ஆதார் எண், EMIS எண், பிறந்த தேதி போன்ற விவரங்களை மதியம் 1 மணி அளவில் வருகைபுரியும் கண்காணிப்பாளரிடம் தவறாமல் அளித்தல் வேண்டும் (ஒரு மாணவரும் விடுபடுதல் கூடாது)
3. மாணவர்களுக்கு தேர்வு அறைகள் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இருக்கை வசதி, காற்றோட்டம், வெளிச்சம் உள்ளதாக இருத்தல் வேண்டும். மேலும் தேர்வு அறைகளுக்கு குடிநீர் வசதி செய்திருத்தல் வேண்டும்.
4. தேர்வு அறைக்குள் கண்காணிப்பாளரை தவிர வேறு எவரும் அனுமதித்தல் கூடாது.
5. அனைத்து தலைமையாசிரியர்கள் இத்தேர்வினை சிறப்பாக நடத்துவதற்கு வருகைபுரியும் கண்காணிப்பாளருக்கு ஒத்துழைப்பு வழங்கி எவ்வித புகாருக்கும் இடம் அளிக்கா வண்ணம் நடத்துதல் வேண்டும்.

**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர் மாவட்டம்.**